I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.2
M.C.O.P.NO.478/2018

| | | |
|---|---|---|
| Name | : | Jayaprakash |
| Father Name | : | Thulasiraman |
| Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 08.07.2025

**விசாரணை தொடங்கிய நேரம் :** 03.35 p.m

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இறந்துபோனவரின் மனைவிக்கு அண்ணன். நீதிமன்றத்திலிருந்து எந்த அழைப்பாணையும் வரவில்லை. நான் தன்னிச்சையாக தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இறந்துபோன கிருஷ்ணன் வயது என்ன என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் வயது 48 இருக்கும். அவருடைய மாத வருமானம் எவ்வளவு என்று முதல் மனுதாரர் சொல்லி எனக்கு தெரியும். நேரடியாக எனக்கு தெரியாது. இந்த விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. நேரடியாக பார்த்த சாட்சிகள் யாரையாவது தெரியுமா என்றால் கடை வைத்திருந்த நபர் கண்ணுற்ற சாட்சி, அவர் பெயர் தெரியாது. கடை வைத்திருந்த நபர்தான் விபத்து எப்படி நடந்தது என்று என்கு சொன்னார்.

முதல் மனுதாரரும் மற்ற மனுதாரர்களும் விபத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆங்கிலம் எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் நகல் ஒன்று எனக்கு கொடுத்தார்கள். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ. 2 ஆங்கிலத்தில் உள்ளது. எனக்கு கொடுத்த முதல் தகவல் அறிக்கை தெலுங்கில் இருந்தது. அந்த

தெலுங்கில் இருந்த முதல் தகவல் அறிக்கை இங்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இங்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ. 2 ல் என் விலாசம் மற்ற விவரங்கள் ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான். புகார் கொடுத்த பிறகு 7 வது மாதமே விசாரணை அறிக்கை பெற்று இறுதி அறிக்கையில் மேற்படி கிருஷ்ணன் மீது தான் தவறு என்று charge abated என்று முடித்து வைக்கப்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து நோட்டீஸ் வந்ததா என்றால் இல்லை. நான் தவறாக புகார் கொடுத்துவிட்டேன் என்று எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் இந்த வழக்கு MCOP No. 478/2018 தாக்கல் செய்யும்போது தெரியவந்தது.

என்னிடம் பொய்யாக கையெழுத்து வாங்கிவிட்டார்கள் என்று ஆந்திரா குற்றவியல் நீதிமன்றத்தில் அல்லது உயர் நீதிமன்றத்திலோ வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். போலீசாருக்கு நோட்டீஸ் மட்டும் கொடுத்தேன். அதன் மீது மேல் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த வழக்கு மட்டும் தாக்கல் செய்தேன். எதற்காக போனார் என்று தெரியவந்ததா என்றால் கோயிலுக்கு போனார், அங்கு திருமணம் ஏற்பாடு இவர்தான் செய்வார். விபத்து சம்பவ இடத்தை நான் போய் பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். இரவு 07.30 மணிக்கு பார்த்து இரவு 09.00 மணிக்கு புகார் கொடுத்தேன். 1 மணிநேரம் அவர்கள் புகார் எடுக்கவில்லை. நான் போய் பார்க்கும்போது என் மோட்டார் சைக்கிள் சுக்குநூறாக நொருங்கி கிடந்தது. எவ்வளவு வேகமாக போயிருந்தால் எதிர் எதிரே மோதும்போது அவ்வாறான சேதாரம் ஏற்பட்டிருக்கும் என்றால் நான் பார்க்கவில்லை அங்கு பார்த்தவர்கள் வேன் தான் வேகமாக வந்தது என்றால் சொன்னார்கள்.

அந்த பைக் எதற்கும் உபயோகப்படாத அளவுக்கு நொருங்கி போயுள்ளது என்றால் சரிதான். அவர் அன்று தலை கவசம் அணியவில்லை என்றால் சரிதான். தலையில் அதிக காயம் என்றால் சரிதான். அவர் தலைகவசத்தை எடுத்து சென்றிருந்தார். அவருக்கு மார்பிலும் காயம் ஏற்பட்டது. பிரேத பரிசோதனை அறிக்கையில் பலத்தரப்பட்ட காயத்தினால் மரணம் ஏற்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அவர் வி.ஐ.டி ல் வேலை செய்து வந்தார் என்பது மனுதாரர் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் மாமா என்ற முறையில் தெரியும். அவர் 1967 ல் பிறந்ததாக கேள்விப்பட்டேன். பிறந்த தேதி தெரியாது. அவருடைய பிறந்த தேதி 10.05.1968, 2017 ல் அவருக்கு 49 வயது. போலீசார் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்று புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் degree முடித்துள்ளேன். இதுபோல் வெற்று பேப்பரில் கையெழுத்து போட கூடாது என்ற தெரியுமா என்றால் அப்போதே கேட்டேன் ஆனாலும் என் மைன்ட் அப்செட் ஆகிவிட்டது. formality க்காக போட சொன்னார்கள். அதன் பிறகு இன்றைய தேதி வரை அந்த வழக்கை முடித்துவிட்டார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. அதை தெரிந்துகொள்ளவும் விரும்பவில்லை. இங்கு வழக்கு நடப்பதால் நான் தெரிந்துகொள்ளவில்லை. தற்போது நான் மாற்றி கூறினால் என் சகோதரிக்கு இழப்பிடு கிடைக்கும் என்று மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

எனக்கு தெலுங்கு பேச தெரியும். எழுத படிக்க தெரியாது. போலீசார் என்னிடம் தெலுங்கிலும் பேசினார்கள், தமிழிலும் பேசினார்கள். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் எனக்கு தெலுங்கு பேச தெரியும் என்றும் எழுத படிக்க தெரியாது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால்

தெலுங்கு எழுத படிக்க தெரியாது என்று சொல்லியுள்ளேன்.

பிரமாண வாக்குமூலத்தில் என்ன என்ன வாசகங்கள் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். அதிலுள்ள விவரங்கள் சொல்ல முடியும். அதில் எழுதப்பட்ட வாசகங்கள் அவ்வாறே சொல்ல இயலாது. என்னுடைய பிரமாண வாக்குமூலம் ஆங்கிலத்தில் போடப்பட்டுள்ளது. ஆனால் நான் தமிழ் மீடியத்தில் தான் படித்தேன் என்றால் பள்ளயில் தமிழிலும் கல்லூரியல் ஆங்கிலத்திலும் படித்தேன்.

நான் என் சகோதரியின் கணவர் ராணுவ வீரர் என்பதால் அவருக்கு குடிப்பழக்கம் இருக்கும் என்றால் அவருக்கு குடி பழக்கம் இல்லை. அவர் குடித்துவிட்டு வேகமாக சென்று விபத்து நடந்தது என்றால் சரியல்ல. எனவே என் சகோதரிக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் :** 04.00 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.